Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annamalai Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 321 | உள்ளூர் - 21.11.2026 | சனிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 321 | வெளியூர் - 22.11.2026 | ஞாயிற்றுக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


## லட்சுமி நாராயண யோகம்: 6 ராசிகளுக்கு நற்பலன்!

## தமிழகத்தில் 1,695 செவிலியர் பணியிடங்கள்!

## லடாக்கில் முதல்முறையாக உள்ளாட்சித் தேர்தல்!

## ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு கட்டாய மாறுதல்!

## துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் தமிழகம் வருகை!

சென்னை, நவ. 21–

துணை ஜனாதிபதி சிபி ராதாகிருஷ்ணன் தமிழகம் வருகை தந்தார். துணை ஜனாதிபதி சிபி ராதாகிருஷ்ணன். அவர் தமிழகம் வர உள்ளார். விமானம் மூலம் சென்னை வரும் சிபி ராதாகிருஷ்ணனை அதிகாரிகள் வரவேற்றனர். இதனை தொடர்ந்து, சென்னை கிழக்கு கடற்கரைச்சாலையில் உள்ள கொட்டிவாக்கத்தில் நெல்லை நாடார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் 42–வது ஆண்டு விழாவில் துணை ஜனாதிபதி சிபி ராதாகிருஷ்ணன் சிறப்பு



விருந்தினராக கலந்துகொள்கிறார். மதியம் 2.30 மணியளவில் நடைபெறும் பள்ளி ஆண்டு விழாவில் பங்கேற்கும் துணை ஜனாதிபதி சிபி ராதாகிருஷ்ணன் பின்னர் நெல்லை நாடார் பொறியியல் கல்லூரி ஆண்கள் விடுதியையும் திறந்து வைத்தார். பின்னர், சென்னை நீலாங்கரையில் மாலை நடைபெறும் தேமுதிக பொருளாளர் சுதீசின் மகள் திருமண வரவேற்பு நிகழ்ச்சியிலும் துணை ஜனாதிபதி சிபி ராதாகிருஷ்ணன் கலந்துகொள்கிறார். சிபி ராதாகிருஷ்ணன் வருகையொட்டி அவர் பயணிக்கும் பகுதிகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், துணை ஜனாதிபதி சிபி ராதாகிருஷ்ணன் வருகையையொட்டி சென்னையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## ஜடாயு மையத்துக்கு பிரதமர் மோடி வருகை?

புதுடெல்லி, நவ. 21–

கேரளத்தின் கொல்லம் மாவட்டம் சடயமங்கலத்தில் உள்ள ஜடாயு பூமி மையத்தைப் பிரதமர் நரேந்திர மோடி பார்வையிட வாய்ப்புள்ளதாக மத்திய இணையமைச்சர் சுரேஷ் கோபி தெரிவித்துள்ளார். முதலில் மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அங்கு செல்ல உள்ளதாகவும் அவர் கூறினார். 'ராமாயணம்' திரைப்படம் மூலம் ஜடாயு கதாபாத்திரம் மீண்டும் கவனம் பெற்றுள்ள நிலையில், மலையுச்சியில் அமைந்துள்ள பிரம்மாண்ட ஜடாயு சிற்பமும் பேசுபொருளாகியுள்ளது. 2004ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட இந்த இயற்கைப் பூங்காவை இயக்குநரும் சிற்பியுமான




ராஜீவ் ஆஞ்சல் வடிவமைத்துள்ளார். சிறகுகள் வெட்டப்பட்டு மலையில் விழுந்த ஜடாயுவின் தோற்றத்தைச் சிற்பம் சித்தரிக்கிறது.

## நவ. 23-ல் திருச்சி செல்கிறார் முதல்வர் விஜய்?

சென்னை, நவ.21–

திருச்சி புத்தூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவ கட்டடத்தின் திறப்பு விழா மற்றும் அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவைத் தொடக்கி வைக்கவும் முதல்வர் விஜய் நவ. 23–ல் திருச்சி செல்லவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருச்சி மாவட்டத்தில் முடிவுற்ற வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைக்கவும், புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும் சாலை வலம் மேற்கொள்ளவும் முதல்வர் விஜய்,



வெள்ளிக்கிழமை (நவ.20) திருச்சிக்கு செல்லவிருவதாக அறிவிக்கப்பட்டது.


இதையடுத்து, மாவட்ட நிர்வாகம், மாநகரக் காவல்துறை, மாவட்டக் காவல்துறை இணைந்து பல்வேறு ஏற்பாடுகளை கடந்த ஒரு வாரமாக தீவிரமாக மேற்கொண்டு வந்தனர். வியாழக்கிழமை பிற்பகல் வரையில் பரபரப்பாக இருந்த முன்னேற்பாடு பணிகளை அமைச்சர்கள் ஆய்வுசெய்து வந்தனர். மேலும், திருச்சியில் முதல்வர் விஜய் சாலை வலம் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இதனிடையே, கொளத்தூர் தவெக எம்எல்ஏ வி.எஸ். பாபு மறைவையடுத்து, முதல்வரின் திருச்சி பயணம் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், திருச்சியில் ரத்து செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் வருகிற திங்கள்கிழமையில் (நவ. 23) நடத்தப்படும் என்றும், முதல்வர் விஜய் கலந்து கொள்வார் என்றும் கூறப்படுகிறது.

## காவிரி ஆணையக் கூட்டம் 25-ல்: தமிழகத்துக்கு நீர் கோரிக்கை!

சென்னை, நவ. 21–

காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டம் நவம்பர் 25ஆம் தேதி டெல்லியில் நடைபெறவுள்ளது. வடகிழக்குப் பருவமழை குறைந்து வருவதால், டெல்டா மாவட்டங்களின் பாசனத் தேவையைப் பூர்த்தி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. காவிரி ஒழுங்காற்றுக் குழு, தமிழகத்துக்கு அடுத்த 15 நாள்களுக்கு விநாடிக்கு 2,000 கனஅடி



நீர் திறக்க அண்மையில் உத்தரவிட்டது. முன்னதாக, நவம்பர் 6ஆம் தேதி நடைபெற்ற மேலாண்மை ஆணையக் கூட்டத்திலும் விநாடிக்கு 3,000 கனஅடி நீர் திறக்க உத்தரவிடப்பட்டிருந்தது. இந்த உத்தரவுகள் பின்பற்றப்படவில்லை என தமிழகத் தரப்பு தெரிவித்துள்ளது.

வரும் கூட்டத்தில், தமிழகத்தின் நீர்த் தேவையை எடுத்துரைத்து, காவிரியில் இருந்து தண்ணீரை உடனடியாகத் திறக்க கர்நாடகாவுக்கு அறிவுறுத்துமாறு வலியுறுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜென் ஸீ-யைக் கவர முயற்சிக்கும் பாஜக! நவ. 26 முதல் சிறப்பு பிரசாரம்!

2027 ஆம் ஆண்டு 7 மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஜென் ஸீ தலைமுறையினரைக் கவரும் நோக்கில் வரும் நவ. 26 ஆம் தேதி முதல் பாஜக சிறப்பு பிரசாரம் மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. உத்தரப் பிரதேசம், பஞ்சாப் மற்றும் குஜராத் உள்ளிட்ட 7 மாநிலங்களில் வரும் 2027 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில், வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ள ஜென் ஸீ தலைமுறையினரின் வாக்குகளைக் கவர பல்வேறு அரசியல் கட்சிகள் முயன்று வருகின்றன.

இந்த நிலையில், ஜென் ஸீ தலைமுறையினரின் வாக்கு வங்கியைக் கைப்பற்ற வரும் நவ.26 ஆம் தேதி முதல் பாஜகவின் 350 நாடாளுமன்ற



உறுப்பினர்களும், நாடு முழுவதுமுள்ள கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு நேரில் சென்று அரசியலமைப்பு குறித்து விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் நவ. 30 ஆம் தேதி வரையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சிகளில், பிரதமர் நரேந்திர மோடியின் அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர்கள் உள்பட 241 மக்களவை உறுப்பினர்கள், அவர்களின் தொகுதிகளுக்குச் சென்று இந்தத் திட்டத்தில் பங்கேற்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்ச்சிகளில், பாஜக நிர்வாகிகளும் பங்கேற்று மாணவர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் பங்கேற்பதை உறுதி செய்வார்கள் என்றும், அரசியலமைப்பின் முக்கிய அம்சங்கள் மீது கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2025 ஆம் ஆண்டு முதல் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு நவ.26 ஆம் தேதியை அரசியலமைப்பு நாளாகக் கொண்டாடி வருகிறது. அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளைக் குறிக்கும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

## பங்குச் சந்தைகளில் 5-ஆவது இடம்! அமெரிக்கா, ஜப்பானை பின்னுக்குத் தள்ளிய இந்தியா!

புதுடெல்லி, நவ. 21–

இந்தியாவின் தேசிய பங்குச் சந்தை (NSE), கடந்த செப்டம்பர் மாதத்தில் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இந்திய தேசிய பங்குச் சந்தையின் பங்குகளின் விலை உயர்ந்து, ஏற்றம் கண்டு வருகிறது.

தற்போதைய சந்தை தரவுகளின்படி, தேசிய பங்குச் சந்தையின் சந்தை மூலதனம் சுமார் 59.7 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. இதன் மூலம் ஹாங்காங் பங்குச் சந்தையையும் (58.1 பில்லியன் டாலர்), அமெரிக்காவின் நாஸ்டாக் பங்குச் சந்தையையும் (57.7 பில்லியன் டாலர்) இந்திய தேசிய பங்குச் சந்தை பின்னுக்குத் தள்ளியது. பெரிய பட்டியலிடப்பட்ட சந்தைகளில் முதலிடத்தில் சீனாவின் குரூப் (111.05 பில்லியன் டாலர்), இரண்டாம் இடத்தில் இன்டர்காண்டினென்டல் எக்ஸ்சேஞ்ச் (95.50 பில்லியன் டாலர்), மூன்றாவதாக டாய்ச் போர்ஸ் (65.00 பில்லியன் டாலர்), நான்காம் இடத்தில் லண்டன் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் குரூப் (60.30 பில்லியன் டாலர்) ஆகியவை உள்ளன. இவற்றைத் தொடர்ந்து, 59.7 பில்லியன் டாலருடன் ஐந்தாவது இடத்தில் இந்தியாவின் தேசிய பங்குச் சந்தை உள்ளது.

## வெளிநாட்டுக் கணக்குதாரர்களுக்கு வரிச்சலுகை!

# ரூ.20 லட்சம் வரை அபராதம் இல்லை! முறையான வருமானம் இருந்தால்


## அபராதம், வழக்கிலிருந்து விலக்கு!!

புதுடெல்லி, நவ. 21–

வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் மொத்தம் ரூ.20 லட்சம் வரை இருப்பு வைத்திருப்போர், சில நிபந்தனைகளின் கீழ் 'FAST–DS' திட்டத்தில் தனியாக அறிவிப்பு தாக்கல் செய்யத் தேவையில்லை என வருமான வரித்துறை விளக்கம் அளித்துள்ளது.

கணக்கில் உள்ள பணம் ஏற்கெனவே வருமான வரிக் கணக்கில் தெரிவிக்கப்பட்ட அல்லது முறையான வருமானத்தின் மூலம் கிடைத்ததாக இருக்க வேண்டும். இத்தகைய கணக்குகள், வருமான வரிக் கணக்கின் வெளிநாட்டுச் சொத்து விவரப் பகுதியில் (Schedule FA) தெரிவிக்கப்படாதிருந்தாலும், ரூ.10 லட்சம் அபராதம் மற்றும் வழக்குத் தொடர்வதிலிருந்து விலக்கு பெறும் எனத் துறையின் கூடுதல் கேள்விபதில் ஆவணம் கூறுகிறது.

ஆனால், வெளிநாட்டுக் கணக்கில் கணக்கில் காட்டப்படாத வருமானம் அல்லது கணக்கில் வராத பணம்



இருந்தால் இந்தச் சலுகை பொருந்தாது. அத்தகையவர்கள் விவரங்களை அறிவித்து, விதிகளின்படி வரி மற்றும் அபராதம் செலுத்த வேண்டும். ரூ.20 லட்சம் வரம்பு, முந்தைய நிதியாண்டில் எந்த நேரத்திலும் இருந்த மொத்த இருப்பைக் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

வெளிநாட்டுச் சொத்துகள் அல்லது வருமானத்தை முன்பு தெரிவிக்காத சிறு வரி செலுத்துவோருக்கு ஒருமுறை வாய்ப்பளிக்கும் FAST–DS திட்டம் ஆகஸ்ட் 15ஆம் தேதி தொடங்கியது. அறிவிப்பைச் சமர்ப்பிக்க டிசம்பர் 31 கடைசி நாள். வெளிநாட்டுக் கணக்கில் பணம் வைத்திருப்போர், தங்கள் கணக்கின் இருப்பு மற்றும் பணத்தின் மூலத்தைச் சரிபார்த்து, பொருந்தும் விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

## பறவைக் காய்ச்சல் பாதித்த பகுதிகளில் மத்திய குழுவினர் நேரில் ஆய்வு!

கடலூர், நவ. 21–

கடலூர் மாவட்டம் கட்டியாங்குப்பத்தில் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட கோழிப்பண்ணைகளில் மத்திய குழுவினர் நேரில் ஆய்வு மேற்கொண்டனர். கடந்த 2 வாரங்களுக்கு முன்பு பறவைக் காய்ச்சல் பாதிப்பால் கோழிப்பண்ணைகளில் சுமார் 50,000 கோழிகள் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.



## மின்வாரிய ஊழியர்களின் பணிக்கொடை உயர்வு!



சென்னை, நவ. 21–

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தகுதியுள்ள பழைய ஓய்வூதியத் திட்ட ஊழியர்களுக்கான ஓய்வு மற்றும் இறப்புப் பணிக்கொடை உச்சவரம்பு ரூ.20 லட்சத்திலிருந்து ரூ.25 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

2024 ஜனவரி 1 முதல் 2026 நவம்பர் 20 வரை ஓய்வுபெற்ற அல்லது பணியின்போது உயிரிழந்த தகுதியுள்ள ஊழியர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் உயர்த்தப்பட்ட பணிக்கொடை வழங்கப்படும் எனத் தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் தெரிவித்துள்ளது.

## 6 மாவட்டங்களில் போலியோ சொட்டு மருந்து முகாம்!



சென்னை,நவ. 21–

தமிழகத்தின் செங்கல்பட்டு, மயிலாடுதுறை, சிவகங்கை, தஞ்சாவூர், திருநெல்வேலி, விருதுநகர் ஆகிய 6 மாவட்டங்களில் நவம்பர் 22ஆம் தேதி போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெறுகிறது. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் முகாம்களில், 5 வயதுக்குட்பட்ட 9.16 லட்சம் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அங்கன்வாடிகள், பேருந்து மற்றும் ரயில் நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் 6,647 மையங்கள் அமைக்கப்படுகின்றன. பெற்றோர் குழந்தைகளுக்கு தவறாமல் சொட்டு மருந்து வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## ராஜஸ்தான் ஊரகத் தேர்தல்: காங்கிரஸ் முன்னிலை; பாஜகவுக்கு பின்னடைவு!

ராஜஸ்தான், நவ. 21–

ராஜஸ்தான் மாநில காங்கிரஸ் தலைவர் கோவிந்த் சிங் தோடாஸ்ரா (இடதுபுறம்) மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் டிக்காராம் ஜூலி ஆகியோர், பஞ்சாயத்து ராஜ் தேர்தலில் கட்சி பெற்ற வெற்றியைக் கொண்டாடும் விதமாக ஜெய்ப்பூரில் உள்ள காங்கிரஸ் அலுவல கத்தில் வெள்ளிக்கிழமை (நவம்பர் 20, 2026) இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர்.



ராஜஸ்தான் உள்ளாட்சித் தேர்தலில் காங்கிரஸ் கட்சி, ஆளும் பாஜகவைவிட அதிக இடங்களில் வெற்றி பெற்று வலுவான முன்னிலை பெற்றுள்ளது. ஜில்லா பரிஷத் தேர்தலில் காங்கிரஸ் 794 இடங்களையும், பாஜக 357 இடங்களையும் கைப்பற்றின. பஞ்சாயத்து சமிதிகளில் காங்கிரஸ் 3,758 இடங்களிலும், பாஜக 2,213 இடங்களிலும் வென்றது. முதல்வர் பஜன் லால் சர்மாவின் தொகுதி உள்ளிட்ட பாஜக தலைவர்களின் செல்வாக்குப் பகுதிகளிலும் காங்கிரஸ் முன்னேறியுள்ளது. கிராமப்புறங்களில் நிலவும் விலைவாசி உயர்வு, வேலையின்மை, இடம்பெயர்வு மற்றும் அரசின் செயல்பாடுகள் மீதான அதிருப்தி ஆகியவை பாஜகவின் பின்னடைவுக்குக் காரணங்களாகக் கூறப்படுகின்றன.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இந்த முடிவு பாஜக அரசுக்கு எச்சரிக்கையாகப் பார்க்கப்படுகிறது. கட்சியின் அமைப்பை வலுப்படுத்தி, உள்ளூர் தலைமை மற்றும் நிர்வாகச் செயல்பாடுகளில் கவனம் செலுத்த வேண்டிய சவால் பாஜகவுக்கு உள்ளது. வெற்றியைத் தக்கவைக்கவும், உள்ளாட்சி அமைப்புகளில் ஒற்றுமையுடன் செயல்படவும் காங்கிரஸும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
சனிக்கிழமை 21.11.2026
பராபவ தமிழ் வருடம்
கார்த்திகை மாதம் 05-ம் தேதி

## கனிம வளத்தைக் காக்க வழியுண்டு!



தமிழகத்திலிருந்து கனிமங்களை வெளிமாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல விதிக்கப்பட்ட தடையை சென்னை உயர் நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிப்பது அவசியம். அதேவேளையில், தமிழகத்தின் மணல், கற்கள் உள்ளிட்ட இயற்கை வளங்களைப் பாதுகாக்க அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துவிட்டன என்று கருதக் கூடாது.

ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக மணல் அல்லது கற்கள் வெட்டி எடுக்கப்பட்டிருந்தால், ஒப்பந்தத்தை ரத்து செய்ய அரசுக்கு உரிமை உண்டு. எனவே, ஒப்பந்த விதிமுறைகள் மீறப்பட்டுள்ளனவா என்பதை அதிகாரிகள் தீவிரமாக ஆய்வு செய்ய வேண்டும். சட்டவிரோதமாக கனிமம் வெட்டி எடுத்தல், சேகரித்தல், கொண்டு செல்லுதல் ஆகியவற்றைக் கண்காணித்து, தவறு உறுதியானால் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கனிம வளங்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் இயக்கம், சுரங்கங்களில் எடுக்கப்படும் அளவு, விற்பனைக்கான கணக்குகள் ஆகியவை முறையாகப் பதிவு செய்யப்பட வேண்டும். தொழில்நுட்ப உதவியுடன் இந்த விவரங்களைச் சரிபார்த்தால், கணக்கில் காட்டப்படும் அளவுக்கும் உண்மையில் எடுக்கப்படும் அளவுக்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டறிய முடியும். ஆற்று மணல் விற்பனையின்போது, அது எந்தக் கட்டுமானப் பணிக்காக வாங்கப்படுகிறது என்பதையும், குறிப்பிட்ட பணிக்கே பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

எதிர்கால ஒப்பந்தங்களைப் புதுப்பிக்கும்போதும், புதிய ஒப்பந்தப்புள்ளிகளை கோரும்போதும், கனிமங்களை எடுத்துச் செல்லும் இடம், அளவு, பயன்பாடு உள்ளிட்டவற்றுக்கு தெளிவான நிபந்தனைகளை அரசு வகுக்கலாம். விதிமுறைகளை ஏற்கும் நிறுவனங்களே ஒப்பந்தத்தில் பங்கேற்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் சட்டபூர்வமான வணிகத்துக்கும் வளப் பாதுகாப்புக்கும் இடையே சமநிலை ஏற்படும்.

நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகும் சட்டம் அனுமதிக்கும் வழிகளில் கனிமக் கொள்ளையைத் தடுக்க முடியும். இயற்கை வளங்கள் இன்றைய தலைமுறைக்கு மட்டுமே சொந்தமானவை அல்ல; வருங்காலத் தலைமுறையினருக்கும் உரியவை. அவற்றைப் பாதுகாப்பது அரசின் கடமை; விழிப்புடன் கண்காணிப்பது அனைவரின் பொறுப்பு.

**ஆசிரியர்: மதுரை மணி**

## ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு கட்டாய மாறுதல்!



சென்னை, நவ. 21–

பள்ளிக் கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கான 2026–27ஆம் கல்வியாண்டு பொது மாறுதல் கலந்தாய்வு, எமிஸ் இணையதளம் மூலம் நடத்தப்பட உள்ளது. இதற்கான அரசாணையைத் துறைச் செயலர் வெளியிட்டுள்ளார். ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 1 முதல் ஆகஸ்ட் 31 வரை மட்டுமே பொதுமாறுதல் வழங்கப்படும். ஜூன் 30ஆம் தேதியுடன் ஒரே அலுவலகத்தில் மூன்று ஆண்டுகள் பணியாற்றியவர்கள் கட்டாயம் இடமாற்றம் செய்யப்படுவர். குரூப்–டி பணியாளர்கள், ஓட்டுநர்கள், ஆய்வக உதவியாளர்கள், 100 சதவீத பார்வையற்றோர் மற்றும் ஓராண்டுக்குள் ஓய்வுபெற உள்ளவர்களுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள், தீவிர உடல்நலப் பாதிப்புள்ளவர்கள், ராணுவத்தினரின் வாழ்க்கைத்துணை, விதவைகள், 40 வயதுக்கு மேற்பட்ட தனிப் பெண்கள், விவாகரத்துப் பெற்ற பெண்கள் உள்ளிட்டோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். விருப்ப மாறுதலுக்கு தற்போதைய பணியிடத்தில் ஓராண்டு பணியாற்றியிருக்க வேண்டும்; அதிகபட்சம் மூன்று இடங்களைத் தேர்வு செய்யலாம். கட்டாய மாறுதலுக்குப் பிறகே விருப்ப மாறுதல் பரிசீலிக்கப்படும். கலந்தாய்வு, காலிப்பணியிட விவரங்கள் உள்ளிட்ட அனைத்தும் எமிஸ் இணையதளம் வழியாக நடைபெறும்.



பழனியில் இந்து முன்னணி மாநில தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம், திருப்பரங்குன்றம் கோவிலில் தீபம் ஏற்றுவதற்கு மதுரை உயர்நீதிமன்ற கிளை உத்தரவிட்டதை பாராட்டினார். அருகினில் நிர்வாகிகள் ஜெகன் பாலன் உள்ளனர்.

## இந்த 4 கேள்விகளுக்கு பதில் அளியுங்கள்; காங்கிரசுக்கு மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ கேள்வி!



அதிபர் டிரம்ப், சீன அதிபர் ஷி ஜின்பிங் மற்றும் ரஷ்ய அதிபர் புடின் ஆகியோரின் முத்தரப்புப் பேச்சு புகைப்படத்தை காங்கிரஸ் எம்பியும், லோக்சபா எதிர்க்கட்சி தலைவர் ராகுல் பகிர்ந்துள்ளார்.

'சமரசம் செய்துகொண்ட ஒரு பிரதமர் ஒருபோதும் இந்த மேசையில் அமர முடியாது' என ராகுல் கடுமையாக சாடி இருந்தார். இதற்கு மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ பதில் அளித்துள்ளார்.

அவர், காங்கிரஸ் கட்டாயம் இந்த 4 கேள்விகளுக்கும் பதில் அளிக்க வேண்டும் என கூறியுள்ளார்.

எழுப்பிய கேள்விகள் பின்வருமாறு:

* 1962ம் ஆண்டு எனது கிராமம் சீனாவால் ஆக்கிரமிக்கப்பட்டது; அந்த அவமானத்திற்கு காங்கிரஸ் மன்னிப்பு கேட்குமா?
* காங்கிரஸ் இந்தியாவை ஒரு ஏழை நாடாகவே வைத்திருந்தது, ஏன்?
* இந்தியா ஏன் 'பாம்பாட்டிகளின் தேசம்' என்று அழைக்கப்பட்டது?
* இந்தியாவின் பொருளாதாரம் ஏன் ஹிந்து வளர்ச்சி விகிதம் என்று அவமதிக்கப்பட்டது?

## குடியரசு துணைத் தலைவர் வருகை: சென்னையில் போக்குவரத்து மாற்றம்!



சென்னை, நவ. 21–

குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் சென்னை வருகையை யொட்டி, சென்னையில் சில பகுதிகள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டிருப்பதுடன், போக்குவரத்து மாற்றமும் செய்யப்பட்டுள்ளன.

குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், சென்னையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நவ. 21–ஆம் தேதி வருகிறார். நிகழ்ச்சிகளில் பங்கேற்றுவிட்டு, நவ. 22–ஆம் தேதி புறப்பட்டு செல்கிறார்.

இந்த இரு நாள்களிலும் சென்னையில் மீனம்பாக்கம், கொட்டிவாக்கம், நீலாங்கரை, கிண்டி, மயிலாப்பூர் பகுதிகள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் ட்ரோன், ஹாட் பலூன், ட்ரோன் கேமராக்கள், பாரா கிளைடர்ஸ், மைக்ரோ லைட் உள்ளிட்டவை பறக்க தடை விதிக்கப்படுகிறது.

மேலும், குடியரசு துணைத் தலைவரின் பயணத்தின்போது குறிப்பிட்ட வழித்தடங்களில் 'பூஜ்ஜிய போக்குவரத்து' நடைமுறை அமல்படுத்தப்பட உள்ளது. இதனால் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் நள்ளிரவு முதல் அதிகாலை வரை கனரக மற்றும் வணிக வாகனங்களுக்குப் போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

நவம்பர் 21–ஆம் தேதி பிற்பகல் 2 மணி முதல் இரவு 9 மணி வரை போக்குவரத்து மாற்றம்

தாம்பரத்திலிருந்து வரும் வாகனங்கள் திருநீர்மலை சந்திப்பில் திருப்பிவிடப்பட்டு, குன்றத்தூர் சாலை வழியாகச் செல்லலாம்.

பல்லாவரத்திலிருந்து வரும் வாகனங்கள் பன்னாட்டு விமான நிலைய சந்திப்பு (ஹோட்டல் ஏர்வே) பகுதியில் திருப்பிவிடப்பட்டு, தாம்பரம் நோக்கிச் செல்லலாம்.

போரூரிலிருந்து வரும் வாகனங்கள் கத்திப்பாரா சந்திப்பில் திருப்பிவிடப்பட்டு, வடபழனி வழியாகச் செல்லலாம்.

அசோக் பில்லரிலிருந்து வரும் வாகனங்கள் சிபெட் (CIPET) சந்திப்பில் திருப்பிவிடப்பட்டு, கிண்டி தொழிற்பேட்டை நோக்கிச் செல்லலாம்.

அண்ணா சாலையிலிருந்து வரும் வாகனங்கள் எம்.சி. ராஜா யு–டர்ன் பகுதியில் திருப்பிவிடப்படும்.

அடையாறிலிருந்து வரும் வாகனங்கள் எல்.பி. சாலை பகுதியில் திருப்பிவிடப்படும்.

ஓ.எம்.ஆர். பகுதியிலிருந்து வரும் வாகனங்கள் எஸ்.ஆர்.பி. டூல்ஸ் பகுதியில் திருப்பிவிடப்படும்.

இ.சி.ஆர். பகுதியிலிருந்து வரும் வாகனங்கள் அக்கரை சந்திப்பில் திருப்பிவிடப்படும்.

நவம்பர் 22–ஆம் தேதி காலை 8 மணி முதல் 10.30 மணி வரை போக்குவரத்து மாற்றம்

1. அடையாறிலிருந்து பாரிஸ் கார்னர் நோக்கிச் செல்லும் வாகனங்கள்:

அடையாறிலிருந்து பாரிஸ் கார்னர் நோக்கி வரும் வாகனங்கள் கிரீன்வேஸ் சந்திப்பில் திருப்பிவிடப்படும். அங்கிருந்து கிரீன்வேஸ் சாலை, ஆர்.ஏ.புரம் 2–வது பிரதான சாலை சந்திப்பு, சேமியர்ஸ் சாலை, டி.டி.கே. சாலை, மியூசிக் அகாடமி சந்திப்பு, ஆர்.கே. சாலை மற்றும் அண்ணா சாலை வழியாகச் சென்று தங்களது இலக்கை அடையலாம்.

2. பாரிஸ் கார்னரிலிருந்து அடையாறு நோக்கிச் செல்லும் வாகனங்கள்:

பாரிஸ் கார்னரிலிருந்து அடையாறு நோக்கிச் செல்லும் வாகனங்கள் உழைப்பாளர் சிலை பகுதியில் திருப்பிவிடப்படும். அங்கிருந்து வாலாஜா சாலை மற்றும் அண்ணா சாலை வழியாகச் சென்று தங்களது இலக்கை அடையலாம்.

போக்குவரத்து நெரிசல் மற்றும் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்க, பொதுமக்கள் போக்குவரத்து காவல்துறையினருக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மேலும், தற்காலிகப் போக்குவரத்து மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, பொதுமக்கள் தங்களது பயணங்களை முன்கூட்டியே திட்டமிட்டுக்கொள்ள வேண்டும் எனச் சென்னை போக்குவரத்து காவல்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

## ஜோதிடர் பேச்சால் மீனவர்களின் வாழ்விடத்தை அழிக்கத் துடிக்கும் தவெக அரசு: மு.க. ஸ்டாலின்!



சென்னை, நவ. 21–

ஜோதிடரின் பேச்சைக் கேட்டுக்கொண்டு மீனவர்களின் பாரம்பரிய வாழ்விடத்தை அழிக்கத் துடிப்பதாக தவெக அரசு மீது முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

உலக மீனவர்கள் நாளில் வாழ்த்து தெரிவித்து மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது, மீனவச் சொந்தங்கள் அனைவருக்கும் கடலளவு அன்போடு உலக மீனவர்கள் நாள் வாழ்த்துகள்.

தமிழர் வரலாற்றிலும் பண்பாட்டிலும் நெய்தல் நில நாயகர்களான மீனவ மக்களுக்குத் தனிச்சிறப்பான இடம் உண்டு. அத்தகைய மீனவ மக்களுக்காக கடந்த திமுக ஆட்சியில் மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகை உயர்வு, புதிய மீன்பிடித் துறைமுகங்கள், தூண்டில் வளைவுகள், எரிபொருள் மானியம் என எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தினோம்.

ஆனால், தற்போதைய தவெக அரசோ ஜோதிடரின் பேச்சைக் கேட்டுக் கொண்டு பட்டினப்பாக்கத்தில்தான் தலைமைச் செயலகம் கட்டுவோம் என மீனவர்களின் பாரம்பரிய வாழ்விடத்தை அழிக்கத் துடிக்கிறது. திரையில் மீனவராக நடித்து ஏமாற்றிய முதல்வருக்கு மீனவர்களின் உண்மையான போராட்டக் குணம் பற்றித் தெரியவில்லை.

மீனவர்களின் பாதுகாப்பு, பாரம்பரிய மீன்பிடி உரிமை, மீனவக் குடும்பங்களின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றுக்காகத் திமுக தொடர்ந்து குரல் கொடுக்கும். அவர்களின் போராட்டத்தில் உடன் நிற்கும்.

அலைகளோடு போராடி, தமது உயிரைப் பணயம் வைத்து உணவளிக்கும் மீனவ மக்களின் துணிவையும் உழைப்பையும் போற்றுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## 3 இலவச கேஸ் சிலிண்டர்: பயனாளிகள் பட்டியலை தயாரிக்கும் தமிழக அரசு!



சென்னை, நவ. 21–

தமிழகத்தில் த.வெ.க. ஆட்சிக்கு வந்தால், ஆண்டுக்கு 6 இலவச சமையல் கேஸ் சிலிண்டர்கள் வழங்கப்படும் என தேர்தல் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. இதை நிறைவேற்றும் வகையில், முதல் கட்டமாக ஆண்டுக்கு 3 சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும் என்றும், இதன் மூலம் 1.30 கோடி குடும்பங்கள் பயன்பெறும் என்றும் சட்டசபையில் முதல்–அமைச்சர் விஜய் அறிவித்தார்.

இந்த நிலையில் இந்த திட்டத்திற்கான பயனாளிகளின் பட்டியலை தமிழக அரசு தயாரித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ் இலவச கேஸ் இணைப்பு பெற்றவர்கள், மகளிர் உரிமைத் தொகையாக ரூ.1,000 பெறுவோர் மற்றும் ஆண்டு வருமானம் ரூ.2.50 லட்சம் வரை உள்ள குடும்பத்தினர் ஆகியோரின் விவரங்களின் அடிப்படையில் பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைய உள்ளன. தமிழகத்தில் தற்போது 2.40 கோடி வீட்டு சமையல் கேஸ் இணைப்புகள் உள்ளன. இதில், ஒரு சிலிண்டர் இணைப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை 1.10 கோடியாக உள்ளது. அவற்றில் 42 லட்சம் இணைப்புகள் பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டவை.

இதுகுறித்து தமிழக அரசு உயரதிகாரி ஒருவர் கூறும்போது, "இலவச கேஸ் சிலிண்டருக்கான தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் தமிழக அரசால் செலுத்தப்படும். ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசு திட்டங்களின் பயனாளிகள் விவரங்களின் அடிப்படையில், இலவச கேஸ் சிலிண்டர் திட்டத்திற்கான பயனாளிகளை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும், அனைத்து குடும்பத்தினரிடமும் விண்ணப்பங்களைப் பெற்று, அவற்றின் அடிப்படையிலும் பயனாளிகளைத் தேர்வு செய்ய வாய்ப்புள்ளது" என்று கூறினார்.

## 2026-ம் ஆண்டுக்கான தொழிலாளர் நல நிதியை ஜனவரி மாதத்துக்குள் நிறுவனங்கள் செலுத்த அறிவுறுத்தல்!





சென்னை, நவ. 21–

2026–ம் ஆண்டுக்கான தொழிலாளர் நல நிதியை ஜனவரி மாதம் 31–ந்தேதிக்குள் நிறுவனங்கள் செலுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி சட்டத்தின்படி தொழிற்சாலைகள், கடைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் மற்றும் தோட்ட நிறுவனங்கள் போன்ற அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தொழிலாளர் பங்கு ரூ.20 மற்றும் நிறுவனத்தின் பங்கு ரூ.40 என ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ.60 என கணக்கிடப்பட்டு தொழிலாளர் நல நிதி தொகையினை தொழிலாளர் நல வாரியத்துக்கு செலுத்த வேண்டும். அதன்படி நடப்பு ஆண்டுக்கான (2026) தொழிலாளர் நல நிதியை அடுத்த ஆண்டு (2027) ஜனவரி மாதம் 31–ந்தேதிக்குள் செலுத்த வேண்டும்.

தொழிலாளர் நல வாரியத்தில் 2026–2027–ம் ஆண்டுக்கு கல்வி உதவித்தொகை, கல்வி ஊக்கத் தொகை மற்றும் பாடநூல் உதவித்தொகை திட்டங்களுக்கு விண்ணப்பங்களை www.lwb.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 'செயலாளர், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை–06' என்ற முகவரிக்கு அடுத்த மாதம் (டிசம்பர்) 31–ந்தேதிக்குள் அனுப்ப வேண்டும் என தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.



## லட்சுமி நாராயண யோகம்: 6 ராசிகளுக்கு நற்பலன்!




புதன் கிரகமும், சுக்கிரனும் இணையும் போது லட்சுமி நாராயண யோகம் உருவாகிறது. வரக்கூடிய 22ஆம் தேதி சுக்கிர பகவான் கன்னி ராசியிலிருந்து துலாம் ராசிக்குப் பெயர்ச்சியாக உள்ளார். மேலும் அங்கு இருக்கக்கூடிய புதனுடன் இணைந்து பயணிக்க உள்ளார். இந்த அற்புத காலத்தில் சில ராசிகளின் வாழ்க்கையில் பெரிய அளவில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். குறிப்பாக நிதி சார்ந்த விஷயங்களில் முன்னேற்றமும், செயல்பாடுகளில் புத்திசாலித்தனமும் அதிகரிக்கும்.

**லட்சுமி நாராயண யோகத்தின் தாக்கம்**

லட்சுமி தேவியின் அம்சமாக சுக்கிரனையும், நாராயணனின் அம்சமாக புதன் பகவானையும் குறிப்பிடுகின்றனர். நவம்பர் 22ஆம் தேதி கன்னி ராசியில் இருந்து துலாம் ராசிக்கு சுக்கிரன் பெயர்ச்சியாகக்கூடிய நிலையில், இந்த இரண்டு கிரகங்களும் இணைந்து லட்சுமி நாராயண யோக பலனை அருள உள்ளன. அதிலும் குறிப்பாக சுக்கிரனின் சொந்த ராசியான துலாம் ராசியில் சந்திக்க உள்ளதால் கூடுதல் விசேஷமாக அமைகிறது. இந்த யோகத்தின் தாக்கம் எந்தெந்த ராசிகளுக்கு அற்புதமாக அமையும் எனத் தெரிந்து கொள்வோம்.

**ரிஷப ராசி**

ரிஷப ராசி அன்பர்களுக்கு உங்கள் ராசிநாதன் சுக்கிரனின் பெயர்ச்சி மற்றும் புதனுடன் இணைவதால் ஏற்படும் 'லட்சுமி நாராயண ராஜயோகம்' நிதி விவகாரங்களில் நல்ல முன்னேற்றத்தைத் தரக்கூடியதாக அமையும். உங்கள் வேலை, தொழிலில் வருமானம் அதிகரிக்கும். நீங்கள் எந்தச் செயல்களில் ஈடுபட்டாலும் சாதக பலன்களைப் பெறுவீர்கள். உங்களுடைய கடின உழைப்பிற்கான அங்கீகாரமும், செயல்பாடுகள் மூலம் முன்னேற்றத்தையும் பெற்றிட முடியும். புதிய வேலை தேடுபவர்களுக்கு நீங்கள் எதிர்பார்த்த நல்ல வாய்ப்புகள் அமையும். தொழில் தொடங்குவதில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்களுடைய எதிரிகளின் தொல்லைகள் குறையும்.

**மிதுன ராசி**

மிதுன ராசி நண்பர்களுக்கு ராசிநாதன் புதனுடன் சுக்கிரன் இணைவதால் பல விதத்தில் சாதக பலன்களைக் காண்பீர்கள். லட்சுமி நாராயண ராஜயோகம் உங்களுடைய தன்னம்பிக்கையையும், வேலை தொடர்பான உத்வேகத்தையும் அதிகரிக்கக்கூடியதாக அமையும். நீண்ட காலமாக நிலுவையில் இருக்கக்கூடிய பணிகளை நிறைவேற்ற முடியும்.

உங்கள் முயற்சிக்கான கூடுதல் பலன் கிடைக்கப் பெறுவீர்கள். உங்கள் பிள்ளைகளின் மூலம் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கும். சிலருக்குப் பூர்வீகச் சொத்துக்கள், நிதி நன்மைகள் பெற வாய்ப்புகள் உண்டு. வெளியூர், வெளிநாடு செல்ல முயற்சிப்பவர்களுக்குச் சாதக வாய்ப்புகள் உண்டு. புதிய தொழில், வியாபார முயற்சியில் இருப்பவர்களுக்குத் திட்டங்கள் எதிர்பார்த்த முன்னேற்றத்தைத் தரும்.

**கடக ராசி**

கடக ராசி அன்பர்களுக்குப் புதன் மற்றும் சுக்கிரனின் சேர்க்கையால் உருவாகும் லட்சுமி நாராயண யோகம் உங்களுடைய தொழில் மற்றும் நிதி சார்ந்த விஷயங்களில் புதிய வாய்ப்புகளையும், முன்னேற்றத்தையும் தரக்கூடியதாக அமையும். வீட்டின் சூழ்நிலை சாதகமாக மாறும். சிலருக்கு வண்டி, வாகனம், சொத்து தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். வேலை தொடர்பாக உங்களுக்குச் சாதகமான சூழ்நிலை ஏற்படும். புதிய பொறுப்புகள் உங்களுக்குக் கிடைக்க வாய்ப்பு உண்டு. உங்கள் திறமை மிளிரும். வேலை, தொழில் தொடர்பான புதிய திட்டங்களைத் தொடங்கச் சாதகமான சூழ்நிலை ஏற்படும். நிதி நிர்வாகங்களில் முன்னேற்றம் ஏற்படும். உங்களுக்கு இனிமையும் சுகமும் கிடைக்கக்கூடிய காலம்.

**துலாம் ராசி**

துலாம் ராசி அன்பர்களுக்கு உங்களுடைய ராசியில் சஞ்சரிக்கப் போகும் சுக்கிரன் மற்றும் புதன் சேர்க்கையால் உருவாகும் லட்சுமி நாராயண ராஜயோகம் சிறப்புப் பலன்களைத் தரக்கூடும். உங்கள் ராசிநாதன் சுக்கிரன் ஆட்சி பெற்று அமர்வதால் செயல்பாடுகளில் நேர்மறையான நற்பலன்களைப் பெறுவீர்கள். உங்கள் மனதில் தன்னம்பிக்கையும், ஆளுமைத் திறனும் மேம்படும்.

உங்களுடைய திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டு உங்கள் இலக்கை வேகமாக அடைய உதவும். சிலருக்குச் சம்பள உயர்வு கிடைக்கலாம். தொழில் செய்யக்கூடியவர்களுக்குப் புதிய வாடிக்கையாளர்கள் மற்றும் தொடர்புகள் மூலம் லாபகரமான ஒப்பந்தங்கள் கிடைக்கலாம்.

**மகர ராசி**

மகர ராசியைச் சேர்ந்தவர்களுக்குக் கர்ம ஸ்தானத்தில் ஏற்படும் லட்சுமி நாராயண ராஜயோகம் உங்களுடைய தொழில் முன்னேற்றத்தை அடைய உதவும். நீங்கள் செய்து வரக்கூடிய வேலை மற்றும் தொழில் தொடர்பான விஷயங்களில் எதிர்பார்த்ததை விட அதிக பலன்கள் கிடைக்கும். சூழ்நிலை சாதகமானதாக மாறும். வேலை தொடர்பாகக் கடின உழைப்பிற்கான அங்கீகாரம் கிடைக்கும். மேலதிகாரிகள் உங்களுடைய செயல்திறனை அங்கீகரிப்பார்கள். சிலருக்குப் புதிய பொறுப்புகள் அல்லது பதவி உயர்வு கிடைக்கலாம். சரியான திட்டமிடல் மற்றும் புதிய உத்திகளைக் கையாள்வ தன் மூலம், நீங்கள் செய்யும் தொழில், வியாபாரத்தில் முன்னேற்றமும், அதை விரிவுபடுத்த நல்ல வாய்ப்புகளும் உருவாகும்.

**கும்ப ராசி**

கும்ப ராசியைச் சேர்ந்தவர்களுக்குப் பாக்கிய ஸ்தானத்தில் ஏற்படக்கூடிய லட்சுமி நாராயண ராஜயோகம், திருமண வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு மகிழ்ச்சியான சூழ்நிலையை ஏற்படுத்தும். உங்கள் தந்தை அல்லது பெரியவர்களின் அன்பு, ஆசிர்வாதத்தால் உங்கள் செயல்பாடுகளில் முன்னேற்றமும் பெரிய உயரத்தையும் அடைய முடியும்.

பல விதத்தில் சாதக பலன்கள் ஏற்படும். குறிப்பாக நீங்கள் எதிர்பாராத சிலரின் உதவிகள், ஆலோசனைகள் கிடைக்கப் பெறுவீர்கள். நிதி சார்ந்த விஷயங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெறுவீர்கள். எதிர்பாராத இடங்களில் இருந்து நிதி ஆதாயம் கிடைக்கலாம். செல்வநிலை அதிகரிக்கும். உங்களுடைய வேலை, குடும்பம் தொடர்பாக இருக்கக்கூடிய கவலை நீங்கி மன அமைதி கிடைக்கும்.




## கை, கால்களில் திடீர் வீக்கம்: கவனம் தேவை!



கைகளிலும் கால்களிலும் ஏற்படும் திடீர் வீக்கத்தையும், உடல் கனமாக உணர்வதையும் புறக்கணிக்கக் கூடாது. அதற்கான காரணங்கள் மற்றும் முக்கியமான தடுப்பு நடவடிக்கைகள் பற்றி அறிந்து கொள்ளுங்கள். இந்த பிரச்சனை உங்களுக்கு அடிக்கடி நிகழ்ந்தால், புறம் தள்ளாதீர்கள். மருத்துரை பார்க்கவும்.

**திடீர் வீக்கம் மற்றும் எடை அதிகரிப்பு**

திடீரென உடல் எடை அதிகரிப்பதாலோ அல்லது குறைவதாலோ பலருக்கு வீக்கம் ஏற்படுகிறது. உடலின் திசுக்களில் அதிகப்படியான நீர் தேங்குவதால், கைகளிலும் கால்களிலும் வீக்கம் உண்டாகிறது. மருத்துவ ரீதியாக, இது நீர் தேக்கம் அல்லது எடிமா என்று அழைக்கப்படுகிறது. இது உடலை கனமாகவும் சோர்வாகவும் உணரச் செய்யும். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

**உணவில் அதிகப்படியான உப்பு**

தினமும் அதிகப்படியான உப்பு, ஊறுகாய், சிப்ஸ் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை உட்கொள்வது உடலில் நீர் தேக்கத்தை அதிகரிக்கும். எனவே, உங்கள் உப்பு உட்கொள்ளலைக் குறைத்து, புத்தம் புதிய, வீட்டில் சமைத்த உணவுகளை உண்ணுங்கள்.

**நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பது**

நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பது அல்லது நிற்பது உங்கள் பாதங்களில் வீக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இதைத் தவிர்க்க, சிறு நடைப்பயிற்சி மேற்கொள்ளுங்கள். சிறிது நேரம் பாதங்களை உயர்த்தி வைத்து ஓய்வெடுப்பதும் நிவாரணம் அளிக்கும்.

**சிறுநீரகப் பிரச்சனைகள் இருப்பது**

சிறுநீரகங்கள் உடலில் உள்ள அதிகப்படியான நீரையும் கழிவுப் பொருட்களையும் வெளியேற்றுகின்றன. சிறுநீரகங்கள் சரியாகச் செயல்படாதபோது, உடலில் நீர் தேங்கத் தொடங்குகிறது. இதனால் முகம், கைகள் மற்றும் பாதங்களில் வீக்கம் ஏற்படலாம். இதுபோன்ற சூழ்நிலையில், மருத்துவரை அணுகவும்.


**ஹார்மோன் மாற்றங்கள்**

மாதவிடாயின் போது ஏற்படும் ஹார்மோன் மாற்றங்கள் பெண்களுக்கு நீர் தேக்கத்தை ஏற்படுத்தலாம். கர்ப்ப காலத்தில் கைகளிலும் கால்களிலும் வீக்கமும் ஏற்படலாம். இந்த வீக்கத்துடன் திடீர் தலைவலி அல்லது மங்கலான பார்வை ஏற்பட்டால், உடனடியாக மருத்துவரை அணுகவும்.

**இதயப் பிரச்சனைகள்**

இதயத்தால் இரத்தத்தைச் சரியாகச் செலுத்த முடியாவிட்டால், உடலில் திரவம் தேங்கக்கூடும். இது பாதங்களிலும் கணுக்கால்களிலும் வீக்கத்தை உண்டாக்கும். இதனுடன் மூச்சுத்திணறல் அல்லது அதீத சோர்வும் ஏற்பட்டால், உடனடியாக மருத்துவரை அணுகவும்.

**ஆரோக்கியமான உணவு மற்றும்**
**வாழ்க்கை முறையைப் பின்பற்றுங்கள்.**



## சினிமா துளிகள்..!

### தாதாசாகேப் பால்கே சர்வதேச திரைப்பட விழா விருதுகள்: கமல்ஹாசன், இளையராஜாவுக்கு சிறப்பு விருது



தாதாசாகேப் பால்கே சர்வதேச திரைப்பட விழா விருதுகள் (DPIFF 2026) வழங்கும் விழா நவம்பர் 20–ம் தேதி (நேற்று) மும்பையில் நடைபெற்றது. இதில் பல்வேறு திரைத் துறை களைச் சேர்ந்த கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த விழாவில் நடிகர் கமல்ஹாசனுக்கு திரைத்துறைக்கான சிறந்த பங்களிப்பு விருது (Outstanding Contribution to the Film Industry) வழங்கப்பட்டது. அதேபோல், இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு இசைத்துறைக்கான சிறந்த பங்களிப்பு விருது (Outstanding Contribution in Music Industry) வழங்கி கவுரவிக்கப்பட்டது. இந்திய சினிமாவிலும் இசைத்துறையிலும் நீண்டகாலமாகத் தங்களது தனித்துவமான பங்களிப்பை வழங்கி வரும் இரு பெரும் ஆளுமைகளுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, தாதாசாகேப் பால்கே பெயரில் வழங்கப்படும் இந்த சர்வதேச திரைப்பட விழா விருதுக்கும், இந்திய அரசு வழங்கும் தாதாசாகேப் பால்கே விருதுக்கும் வித்தியாசம் உள்ளது. இந்திய அரசின் தாதாசாகேப் பால்கே விருது, தேசிய திரைப்பட விருதுகள் விழாவில் வழங்கப்படும் இந்திய சினிமாவின் உயரிய கவுரவமாகும். ஆனால், தாதாசாகேப் பால்கே சர்வதேச திரைப்பட விழா விருதுகள் தனியார் அமைப்பு நடத்தும் திரைப்பட விழாவின் ஒரு பகுதியாகும்.

முக்கிய விருது வெற்றியாளர்கள்

சிறந்த திரைப்படம்: துரந்தர் (துரந்தர்)

சிறந்த இயக்குநர்: ஆதித்யா தார் (துரந்தர்)

சிறந்த நடிகர்: ரன்வீர் சிங் (துரந்தர்)

சிறந்த நடிகை: அனீத் படா (சையாரா)

திரைத்துறையில் சிறந்த பங்களிப்பு: கமல்ஹாசன்

சிறப்புக் கவனம் பெற்ற ஆளுமைகள்: இளையராஜா, ரிஷப் ஷெட்டி, யாமி கௌதம் தார்

சிறந்த நகைச்சுவையாளர்: சமையல் ரெய்னா

# தங்கம் விலை குறைய மூன்று முக்கிய காரணங்கள்!

சென்னை, நவ. 21–

தொடர்ந்து உயர்ந்து வந்த தங்கம் விலை, அக்டோபர் மாதம் சப்தமே இல்லாமல் யு டர்ன் எடுக்கத் தொடங்கியது. நவம்பர் மாதத்தில் ஒரு லட்சத்துக்கும் கீழ் குறைந்து இன்னும் நிற்காமல் குறைந்துகொண்டே செல்கிறது. தொடர்ச்சியாக 9 வணிக நாள்களாக தங்கம் விலை குறைந்து வருகிறது. இதனால், மக்கள் பலருக்கும் மிகப்பெரிய சந்தேகம், ஏன் திடீரென தங்கம் விலை குறைகிறது என்பதே. இதற்கு முக்கிய காரணம், அமெரிக்காதான் என்று தெரிந்ததும் பலரும் ஆச்சரியம் அடைந்துள்ளனர்.

அமெரிக்க டாலரின் மதிப்பு 19 மாதங்கள் இல்லாத உச்சத்தை எட்டியுள்ளதால், டாலர் மதிப்பில், விலை நிர்ணயம் செய்யப்படும் தங்கமானது, பிற நாட்டு ரூபாய்களைக் கொண்டு தங்கம் வாங்குபவர்களுக்கு இன்னும் அதிக விலை கொண்டதாக மாறியுள்ளது



என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள். இதன் காரணமாக தங்கத்திற்கான உலகளாவிய தேவையில் எதிரொலித்து, தற்போது தங்கத்தின் விலை குறைந்து வருகிறது.

அமெரிக்க ஃபெடரல் ரிசர்வ் வங்கி அறிவிக்கப்போவதாக அச்சமூட்டி வரும் வட்டி விகித உயர்வு குறித்த கவலைகளும் காரணமாகின்றன.

அமெரிக்க ஃபெடரல் ரிசர்வ் டிசம்பர் மாத முதல் வாரத்தில் மீண்டும் வட்டி விகிதத்தை உயர்த்தும் என்ற எதிர்பார்ப்பு, பத்திரங்களின் வருவாய் உயர்வதற்கு வழிவகுத்துள்ளன. அமெரிக்க வட்டி விகித உயர்வு குறித்த எதிர்பார்ப்புகளும், தொடர்ச்சியான பணவீக்கமும் சந்தைகளில் பங்குகளின் கட்டாய விற்பனைக்குக் காரணமாகியிருக்கின்றன. முதலீட்டாளர்கள் தங்களது நஷ்டத்தை ஈடு செய்ய தங்கத்தை விற்பனை செய்வதும் ஒரு காரணம். தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த பங்குகளில் ஏற்பட்டுள்ள சரிவு, தங்கத்தின் மீதும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. சில முதலீட்டாளர்கள் மற்ற முதலீடுகளில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட, தங்களிடம் இருந்த தங்கத்தை விற்று பணமாக்கி வருவதாகக் கூறப்படுகிறது. நீண்ட கால முதலீடுகளுக்கு இது சிறந்த நேரமாக இருந்தாலும், தற்போது விலை குறைந்துகொண்டே செல்கிறதே, இது நீண்ட நாள்களுக்குக் குறைந்த மிகக் குறைந்த விலையில் விற்பனையாகும் என்பது நிச்சயமில்லை என்றும் கூறப்படுகிறது.

# வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் செய்ய 2 நாள் சிறப்பு முகாம்!

சென்னை, நவ. 21–

புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விரும்புவோருக்கு இந்திய தேர்தல் ஆணையம் வாய்ப்பளித்துள்ளது. இதன்படி தகுதியுள்ள இளம் வாக்காளர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் இணைத்துக்கொள்ளலாம்.

18 வயது பூர்த்தியடைந்த மற்றும் தகுதியான வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6 மற்றும் அதனுடன் கூடிய உறுதிமொழிப் படிவத்தைப் பூர்த்தி செய்து வழங்க வேண்டும்.

இதேபோல், பெயர் நீக்குவ தற்கு படிவம் 7, வாக்காளர் விவரத் திருத்தம், முகவரி மாற்றம் மற்றும் வாக்காளர் அடையாள அட்டை மாற்றுப் பிரதி பெறுவதற்கு படிவம் 8–ஐயும் பூர்த்தி சமர்ப்பிக்க வேண்டும்.

2027 ஜனவரி 1–ல் 18 வயது பூர்த்தியடைவோர், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதோர் இந்த சிறப்பு முகாம்களில் பயன் பெறலாம்.

மாநிலத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் (நவ. 21, 22) இரு நாள்களுக்கு காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரையில் சிறப்பு முகாம் நடைபெறுகிறது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரபூர்வ இணையதளத்தின் வாயிலாகவும் (https://voters.eci.gov.in/) மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்.

# வேகம் முக்கியம்! நாரா லோகேஷ் கிண்டலுக்கு பதில் கொடுத்த அமைச்சர் கீர்த்தனா!

சென்னை, நவ. 21–

ஆந்திர மாநிலத்தில் ரூ.10 லட்சம் கோடி மதிப்பிலான முதலீட்டு முன்மொழிவுகள் பெறப்பட்ட முதலீட்டு உச்சிமாநாடு நடைபெற்று ஒரு வாரம் ஆகிறது.

இந்த உச்சிமாநாட்டின் பணிகளில் ஈடுபட்டிருந்த சிலர் ஊடகங்களில் அதிக கவனம் பெற்றிருந்தனர். காரணம், இவர்கள் ஆந்திரத்துக்கு தகவல்களை கசியவிட்ட குற்றச்சாட்டின் பேரில், கடந்த ஜூலை மாதம் தமிழ்நாட்டின் முதலீட்டு ஊக்குவிப்பு அமைப்பான வழிகாட்டுதல் தமிழ்நாடு நிறுவனத்திலிருந்து நீக்கப்பட்ட 15 பணியாளர்கள் என்றும் முக்கிய ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதற்கு, வழிகாட்டுதல் தமிழ்நாடு அமைப்பிலிருந்து வெளியேறிய முன்னாள் ஊழியர் ஒருவர் கடும் எதிர்ப்பு தெரிவித்து சில தகவல்களையும் விளக்கியிருந்தார்.

இது தமிழ்நாட்டில் பெரிய அதிர்வலையை ஏற்படுத்தியிருந்த நிலையில், இதனை விமர்சித்து ஆந்திர தொழில்துறை அமைச்சர் நாரா லோகேஷ் ஒரு கருத்தை எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டிருந்தார்.



அதில், முக்கியச் செய்தி: ஆந்திரப் பிரதேசத்தின் மிக ரகசியமான முதலீட்டு உத்தி கசிந்துவிட்டது. அதுதான், 'முதலீட்டாளர்களுக்கு அதே நாளில் பதிலளிப்பது'. தாராளமாக இதைப் பின்பற்றுங்கள்! என்று தமிழக தொழில்துறை அமைச்சர் கீர்த்தனாவுக்கு சொல்வது போல பதிவிட்டிருந்தார்.

அதாவது, முதலீட்டாளர்கள் தொடர்புகொண்டால், உடனடியாக அவர்களுக்கு பதிலளிக்க வேண்டும், காலம் தாழ்த்தக் கூடாது, வேகம்தான் முக்கியம் என்பது போல கருத்திட்டிருந்தார்.

ஏற்கனவே, தமிழ்நாட்டில், தொழில் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து பல்வேறு முரண்பட்ட தகவல்கள் பரவி வரும் நிலையில், ஆந்திர அமைச்சரின் இந்த கிண்டல் பதிவு எரியும் தீயில் எண்ணெய் ஊற்றியதுபோல மாறியது.

உடனடியாக இந்த பதிவுக்கு தமிழக அமைச்சர் கீர்த்தனா தன்னுடைய பதிலை பதிவிட்டுள்ளார். அதில், விரைவான பதில்கள் நல்லவைதான், ஆனால் இன்னும் வேகமான செயல்பாடு? அதைவிடச் சிறப்பு! தமிழ்நாடு, 'வெற்றி முதலீடு மற்றும் மாற்றத்திற்கான மாநாடு 2026' (VETTRI Investment & Conversion Conclave 2026)–ன் இரண்டாவது பதிப்பிற்குத் தயாராகி வருகிறது!

எங்கள் இலக்கு தெளிவானது: முதலீட்டு உறுதிமொழிகள், மாற்றத்திற்கான மைல்கற்கள், களத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகள்.

தமிழக முதல்வர் ஜோசப் விஜய் தலைமையின் கீழ், முதலீட்டு உறுதிமொழிகளை உறுதியான பலன்களாக மாற்றவும், களத்தில் திட்டவட்டமான) முடிவுகளை வழங்கவும் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம்.

இன்னும் 4 நாட்களே உள்ளன!

25 நவம்பர் 2026. என்று பதிவிட்டு பதிலளித்துள்ளார்.

# ஓட்டன்சத்திரத்தில் அசுர வேகத்தில் செல்லும் தனியார் ஆம்புலன்ஸ்கள்; பொதுமக்கள் அச்சம்! அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க கோரிக்கை!

ஒட்டன்சத்திரன் நவ. 21–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் பகுதியில் தனியார் ஆம்புலன்ஸ்கள் சில அசுர வேகத்தில் சாலைகளில் செல்வதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர். அவசர சிகிச்சைக்காக நோயாளிகளை அழைத்துச் செல்வது பாராட்டுக்குரியதாக இருந்தாலும், அதிவேகமாகவும், போக்குவரத்து விதிகளைப் பின்பற்றாமலும் செல்வதால் சாலை விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளதாக பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே, தனியார் ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களுக்கு உரிய வேகக் கட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து விதிகள் குறித்து அறிவுறுத்துவதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். உயிரைக் காப்பாற்றும் ஆம்புலன்ஸ்கள், சாலையில் மற்ற உயிர்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தாத வகையில் இயக்கப்பட வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# டாஸ்மாக் கடைக்கு பூட்டு போடும் போராட்டம்!

கரூர், நவ. 21–

கரூர் மாநகர செயலாளர் தண்டபாணி தலைமை வகித்தார். மாநில குழு உறுப்பினர் பாலா, மாவட்ட செயலாளர் ஜோதிபாசு, ஜீவானந்தம் உட்பட பலர் பேசினர். இந்த டாஸ்மாக் கடை பிரசித்தி பெற்ற வஞ்சுலீஸ்வரர் கோயிலுக்குச் செல்லும் வழியிலும் 100 மீ.தூரத்தில் அம்மா உணவகம், தமிழக அரசின் வேளாண்மை கல்லூரி, உழவர்சந்தை, மருத்துவமனைகள், குடியிருப்புகள், வணிக வளாகங்கள் அனைத்தும் நிரம்பிய பகுதியாக உள்ளன.

இந்த கடையினால் தினசரி மாலை 4மணிக்கு மேல் நூற்றுக் கணக்கானோர் நீண்ட வரிசையில் நின்று மது வாங்குவதும், அங்கேயே சாலைஓரம் கூட்டமாக வாசலிலும், உழவர்சந்தை வாயிலிலும் அமர்ந்து மது அமர்ந்து மது அருந்து வதும், சிலர் கோயில் பகுதியிலும், வீடுகள் முன்பாகவும், கல்லூரி முன்பாகவும்




அருந்துகின்றனர். காலி மது பாட்டில்களை சிலர் உடைத்துப் போட்டுச் செல்கின்றனர். வீட்டில் உள்ளவர்கள் தங்கள் வீடு முன்பாக குடிக்க வேண்டாம் என்று கூறினால், காலி பாட்டில்களை வீட்டு கேட்டினுள் எறி வது என்று பல்வேறு கஷ்டங்களை உருவாக்கு கின்றனர்.

எனவே இந்த கடையை வரும் டிசம்பர் 31ம் தேதிக்குள் வேறு இடத்திற்கு மாற்றி கொள்ளுங்கள் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினார்.

கரூர் டிஎஸ்பி ராஜராஜன் டாஸ்மாக் மேலாளர் லியோ தங்கதுரை கரூர் தாசில்தார் பிரகாஷ் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்ட வர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் குறைந்தது 6 மாதமாவது அவகாசம் வேண்டும் என்றனர்.

இறுதியாக வரும் 2027 மார்ச் 31ம் தேதிக்குள் கடையை வேறு பகுதிக்கு மாற்றுவது என்று கூறியதை யடுத்து போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர். இதனால்ஒரு மணி நேரம் கடையின் விற்பனையும் நிறுத்தப்பட்டிருந்தது.



பழனி அரசு மருத்துவமனையில், கொடைக்கானல் விபத்தில் படுகாயம் அடைந்தவர்களை முன்னாள் அமைச்சர் ஒட்டன்சத்திரம் தொகுதி எம்எல்ஏ அர சக்கரபாணி சந்தித்து ஆறுதல் கூறினார். அருகினில் பழனி திமுக நகர செயலாளர் வேலுமணி உள்ளார்.


# வேலை வாய்ப்பு

## தமிழகத்தில் 1,695 செவிலியர் பணியிடங்கள்!




| | |
|---|---|
| விவரம் | தகவல் |
| நிறுவனம் | மாநில சுகாதாரச் சங்கம், தமிழ்நாடு |
| வேலை வகை | தமிழ்நாடு அரசு வேலை |
| நியமனம் | ஒப்பந்த அடிப்படை |
| மொத்த காலிப்பணியிடங்கள் | 1695 செவிலியர் பணியிடங்கள் |
| பணியிடம் | தமிழ்நாடு |
| விண்ணப்பம் தொடங்கும் நாள் | 20.11.2026 |
| கடைசி நாள் | 04.12.2026 மாலை 5.00 மணி |
| விண்ணப்பிக்கும் முறை | ஆஃப்லைன் |
| அதிகாரப்பூர்வ இணையதளம் | nhm.tn.gov.in |




இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், மாதவனூர் ஊராட்சி, மாதவனூர் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# சபரிமலைக்கு சிறப்பு ரயில்கள்: நெல்லை வழியாக இயக்கம்!



சபரிமலை, நவ. 22–

சபரிமலைப் பயணிகள் கூட்ட நெரிசலைச் சமாளிக்க நான்டெட்கொல்லம் இடையே சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன. ரயில் எண் 07687, டிசம்பர் 7 முதல் ஜனவரி 11 வரை திங்கட்கிழமைகளில் நான்டெட்டிலிருந்து புறப்பட்டு, புதன்கிழமை காலை கொல்லம் சென்றடையும். மறுமார்க்கத்தில் 07688, டிசம்பர் 9 முதல் ஜனவரி 13 வரை புதன்கிழமைகளில் கொல்லத்திலிருந்து புறப்படும். மேலும், சார்லப்பள்ளி கொல்லம் இடையே 07691/07692 சிறப்பு ரயில்கள் ஜனவரி 18 மற்றும் 20ஆம் தேதிகளில் இயக்கப்படும்.

இந்த ரயில்கள் திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சங்கரன்கோவில், கடையநல்லூர், தென்காசி, செங்கோட்டை உள்ளிட்ட நிலையங்களில் நின்று செல்லும். ஏசி, ஸ்லீப்பர் மற்றும் பொதுப்பெட்டிகள் இணைக்கப்படும்.




இஸ்மாயில் லக்கி
ஸ்ரீராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்

## டிரம்ப்–ஷி அணைப்பில் சிக்கிய உலகம்!



## மீனவப் பெருமக்களின் நலன்களை பேணிப் பாதுகாப்போம்: முதல்-அமைச்சர் விஜய்!



சென்னை, நவ. 21–

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 21–ந்தேதி உலக மீனவர்கள் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நிலையில் மீனவர்கள் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு முதல்–அமைச்சர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:–

கடல் அலைகளின் ஆர்ப்பரிப்பையும், இயற்கையின் சவால்களையும் எதிர்கொண்டு, தங்கள் உயிரையும், உடைமையையும் பணயம் வைத்து உழைக்கும் மீனவப் பெருமக்களுக்கு உலக மீனவர் தினத்தில் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களின் கடின உழைப்பால் நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றி வரும் மீனவப் பெருமக்களின் அர்ப்பணிப்பு மகத்தானது.

மீனவச் சமுதாயத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, அவர்களின் பாதுகாப்பான மற்றும் வளமான எதிர்காலத்தை உறுதிசெய்வது நம் அனைவரின் கடமையாகும்.

மீனவப் பெருமக்களின் நலன்களை பேணிப் பாதுகாப்போம்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சபரிமலையில் அலைமோதும் பக்தர்கள் கூட்டம்: ஒரே நாளில் 60,000 பேர் தரிசனம்!



திருவனந்தபுரம், நவ. 21–

கேரள மாநிலம் சபரிமலை ஐயப்பன் கோவிலில் மண்டல பூஜை சீசன் தொடங்கி நடைபெற்று வரும் நிலையில், நேற்று ஒரே நாளில் சுமார் 60,000 பக்தர்கள் சாமி தரிசனம் செய்துள்ளனர்.

கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டம் சபரிமலையில் உள்ள ஐயப்பன் கோவிலில் மண்டல பூஜை சீசன் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதையடுத்து நேற்று (வெள்ளிக்கிழமை) ஒரே நாளில் சுமார் சுமார் 60,000 பக்தர்கள் சாமி தரிசனம் செய்துள்ளனர். நாளுக்கு நாள் பக்தர்களின் வருகை அதிகரித்து வருவதால், கூட்ட நெரிசலைத் தவிர்க்க கேரள அரசும் தேவசம் போர்டும் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. அதன்படி, தினமும் அதிகபட்சமாக 80,000 பக்தர்கள் மட்டுமே சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இதில், ஆன்லைன் முன்பதிவு மூலம் 66,000 பக்தர்களும், உடனடி முன்பதிவு மூலம் 14,000 பக்தர்களும் தரிசனம் செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பக்தர்கள் எவ்வித சிரமமும் இன்றி தரிசனம் செய்வதை உறுதி செய்ய பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும், சன்னிதானத்தில் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்தும் விதமாக, பக்தர்களின் வருகைக்கு ஏற்ப நிமிடத்திற்கு சுமார் 75 பேர் வீதம் 18–ம் படி ஏற அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

## ரூ.28 கோடி ஊழல் வழக்கில் இறுகும் பிடி; தவெக தாவுகிறாரா திமுக எம்.எல்.ஏ.,?



தஞ்சாவூர், நவ. 21–

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு தொகுதி தி.மு.க., –எம்.எல்.ஏ.,வும், முன்னாள் அமைச்சருமான வைத்திலிங்கம், 28 கோடி ரூபாய் லஞ்ச வழக்கு காரணமாக, த.வெ.க.,வில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அ.தி.மு.க., ஆட்சியில் வீட்டு வசதித்துறை அமைச்சராக இருந்த வைத்திலிங்கம், கடந்த 2015ல், சென்னையில், ஸ்ரீராம் குழும நிறுவனம், 57.94 ஏக்கரில் அடுக்குமாடி குடியிருப்பு கட்ட அனுமதி அளித்தார். இதற்காக, வைத்திலிங்கத்தின் மகன் நிர்வகித்த 'முத்தம்மாள் எஸ்டேட் பிரைவேட் லிமிடெட்' நிறுவனத்திற்கு, ஸ்ரீராம் குழுமத்தின் கெமிக்கல்ஸ் நிறுவனம் வாயிலாக, 27.90 கோடி ரூபாய் பரிமாற்றம் செய்யப்பட்டது.

இது தொடர்பாக, தி.மு.க., ஆட்சியின்போது, கடந்த 2024ல், 'அறப்போர் இயக்கம்' சார்பில், லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளிக்கப்பட்டது. அதன்படி, ஐந்து பிரிவுகளின் கீழ், வைத்திலிங்கம் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், வைத்திலிங்கம், சட்டசபை தேர்தலுக்கு முன், இந்த ஆண்டு ஜனவரியில், அ.தி.மு.க.,வில் இருந்து விலகி தி.மு.க.,வில் இணைந்தார். மறு மாதமே, அவர் மீதான வழக்கை மூடுவதாக, நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை மனு தாக்கல் செய்தது. இதற்கு எதிராக, அறப்போர் இயக்கம் தொடர்ந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் மீதான விசாரணையை மீண்டும் தொடங்க உத்தரவிட்டு, மூன்று மாதம் அவகாசம் வழங்கியது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில், அறப்போர் இயக்க ஒருங்கிணைப்பாளர் ஜெயராமனை, த.வெ.க., மருத்துவர் அணி நிர்வாகி அரவிந்தன் சந்தித்து, 'முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் மீதான வழக்கில், த.வெ.க., அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும்,' என்று கூறியுள்ளார். இதனால், அ.தி.மு.க.,வில் இருந்து தி.மு.க.,வில் இணைந்து, எம்.எல்.ஏ.,வான வைத்திலிங்கம், 28 கோடி ரூபாய் ஊழல் வழக்கு காரணமாக, த.வெ.க.,வில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## நாட்டின் முதல் புல்லட் ரெயில் சேவை 2027-ம் ஆண்டு தொடங்கும்! மத்திய மந்திரி தகவல்!



புதுடெல்லி, நவ. 21–

இந்தியாவின் முதல் அதிவேக புல்லட் ரெயில் சேவை 2027–ம் ஆண்டு தொடங்கப்படும் என்று மத்திய ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். முதற்கட்டமாக குஜராத் மாநிலம் சூரத் முதல் வாபி வரையிலான வழித்தடத்தில் ரெயில் இயக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:–

இந்தியாவின் முதல் புல்லட் ரெயில்களை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. சென்னை ஐ.சி.எப். மற்றும் பெமல் நிறுவனம் இணைந்து மணிக்கு 280 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய பி–28 ரக ரெயிலை தயாரித்து வருகின்றன. இதன் முதல் பெட்டிக்கான சட்டகம் தயாரிக்கப்பட்டு, கட்டமைப்பு சோதனைகள் நடைபெற்று வருகின்றன. முதல் புல்லட் ரெயில் சேவை 2027–ம் ஆண்டு தொடங்கும். குஜராத் நகரின் சூரத்–வாபி இடையே முதற்கட்டமாக இந்த புல்லட் ரெயில்கள் இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2017–ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட இந்த திட்டம் தாமதமானதற்கு நிலம் கையகப்படுத்துதல் மற்றும் அரசு அனுமதிகள் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் முக்கிய காரணம் ஆகும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கைவிடப்பட்ட குவாரிகளை சுற்றி 5 அடி உயர தடுப்பு வேலி: தமிழக அரசு!



சென்னை, நவ. 21–

தமிழகத்தில் பாதுகாப்பற்ற, கைவிடப்பட்ட குவாரிகளை சுற்றி 5 அடி உயர தடுப்பு வேலி அமைக்க வேண்டும் என தமிழக அரசின் புவியியல் மற்றும் சுரங்கத்துறை சார்பில் உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் தமிழக அரசின் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குனர் பிரபுசங்கர் அனுப்பிய சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

சமீப காலங்களில் பாதுகாப்பற்ற கைவிடப்பட்ட குவாரிகளில் உயிரிழப்புகளை ஏற்படுத்தும் விபத்துகள் பதிவாகி வருகின்றன. இது மிகுந்த கவலையளிக்கிறது. இத்தகைய பாதுகாப்பற்ற கைவிடப்பட்ட குவாரிகள் குறிப்பாக, பருவமழையின்போது மழைநீர் தேங்கும் ஆழமான குழிகள், உள்ளூர்வாசிகள், குழந்தைகள், பாதசாரிகள் மற்றும் மேய்ச்சல் கால்நடைகள் தவறி விழுவதற்கும், நீரில் மூழ்குவதற்கும் வழியை ஏற்படுத்துகின்றன.

இதை தவிர்ப்பதற்காக, அரசு நிலங்கள் மற்றும் பட்டா நிலங்கள் இரண்டிலும் அமைந்துள்ள காலாவதியான அனைத்து கைவிடப்பட்ட குவாரிகளைச் சுற்றியும் நீடித்திருக்கக்கூடிய சுற்றுவேலி அமைக்கப்பட வேண்டும். நீடித்த உழைப்பு மற்றும் பயனுள்ள தடுப்பை உறுதி செய்வதற்காக, அனைத்து குவாரிகளைச் சுற்றியும் குறைந்தபட்சம் 5 அடி உயரத்திற்கு வேலி அமைக்கப்பட வேண்டும்.

அரசு நிலங்களில் அமைந்துள்ள கைவிடப்பட்ட குவாரிகளுக்கு 2 மாத காலத்திற்குள் வேலி அமைக்கும் பணிகளை அதிக முன்னுரிமை அளித்து முடிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட முன்னாள் குத்தகைதாரர்கள் தங்கள் சொந்த செலவில் முறையான வேலியை அமைத்துள்ளார்களா? என்பதை உறுதிசெய்ய, காலாவதியான அனைத்து பட்டா நில குவாரிகளிலும், விரிவான கள சரிபார்ப்பை மேற்கொள்ள வேண்டும். முன்னாள் குத்தகைதாரர்கள் அதை பின்பற்றத் தவறியிருந்தால் உடனடியாக அறிவிப்புகள் வழங்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளின் கீழ் கடுமையான அமலாக்க நடவடிக்கை தொடங்க வேண்டும். கைவிடப்பட்ட குவாரி என்பதைத் தெளிவாகக் குறிக்கும் வகையில் அதன் ஆழத்தை குறிப்பிட்டும், அத்துமீறி நுழைவதற்கு எதிரான எச்சரிக்கையுடனும் கூடிய முக்கிய எச்சரிக்கை பலகைகள், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அதன் சுற்றளவில் வைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விலைவாசி உயர்வுக்கு தவெக அரசை மட்டும் குறை கூற முடியாது - குஷ்பு!



சென்னை, நவ. 21–

தமிழகத்தில் அண்மைக்காலமாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்து வருவது பொதுமக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக பல்வேறு அரசியல் கட்சியினரும் தங்களது கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், விலைவாசி உயர்வுக்கு தமிழக வெற்றிக் கழக (தவெக) அரசை மட்டுமே குறை கூற முடியாது என்று நடிகையும் அரசியல்வாதியுமான குஷ்பு தெரிவித்துள்ளார். நவம்பர் 20–ம் தேதி செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து குஷ்பு கூறுகையில், விலைவாசி உயர்வு என்பது தமிழகத்தில் மட்டுமே நிலவும் பிரச்சினை அல்ல. உலகம் முழுவதும் பல்வேறு நாடுகள் இந்தப் பாதிப்பைச் சந்தித்து வருகின்றன. மத்திய கிழக்குப் பகுதிகளில் நிலவும் போர்ச் சூழல், சர்வதேசப் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாகவே பல்வேறு பொருட்களின் விலைகள் உயர்ந்து வருகின்றன என்றார்.

மேலும், சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்காக தவெக அரசு ஆட்சிக்கு வந்ததால்தான் விலைவாசி உயர்ந்துள்ளது என்று குற்றம் சாட்டுவது சரியல்ல. தற்போதைய சூழலைப் பொதுமக்கள் சில காலம் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றும் குஷ்பு தெரிவித்துள்ளார். அவரது இந்தக் கருத்து அரசியல் வட்டாரத்தில் கவனத்தைப் பெற்றுள்ளது.

## லடாக்கில் முதல்முறையாக உள்ளாட்சித் தேர்தல்!



லடாக், நவ. 21–

கடந்த 2019–ஆம் ஆண்டில் லடாக் யூனியன் பிரதேசமாக பிரிக்கப்பட்ட பிறகு, முதல் முறையாக பஞ்சாயத்து மற்றும் நகராட்சித் தேர்தல்கள் இன்று நடைபெற்று வருகின்றன. காலை 8 மணிக்கு துவங்கிய வாக்குப்பதிவு மாலை 5 மணிக்கு முடிவடைய உள்ளது.

லடாக் மாநிலத் தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, யூனியன் பிரதேசத்தில் உள்ள அனைத்து பஞ்சாயத்து தொகுதிகளுக்கும் இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது. லடாக் தலைமைத் தேர்தல் அதிகாரி ராகுல் சர்மா வெளியிட்ட அறிவிப்பின்படி, லே (21 வார்டுகள்) மற்றும் கார்கில் (17 வார்டுகள்) நகராட்சி குழுக்களுக்கான தேர்தலும் இன்று நடைபெறுகிறது. கார்கிலில் 4 வார்டுகளில் பிரதிநிதிகள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அங்கு மொத்தமுள்ள 192 பஞ்சாயத்து தொகுதிகளில் 55 சர்பஞ்சுகளும் (Sarpanch), 1,428 பஞ்ச் இடங்களில் 1,186 பேரும் ஏற்கனவே போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என லடாக் தலைமைச் செயலாளர் ஆஷிஷ் குந்த்ரா தெரிவித்துள்ளார். மீதமுள்ள இடங்களுக்கே இன்று வாக்குப்பதிவு நடக்கிறது. பஞ்சாயத்து மற்றும் நகராட்சித் தேர்தல்களுக்கான முழு தேர்தல் நடைமுறைகளும் நவம்பர் 30, 2026 அன்று நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மணிப்பூரில் கள்ளச்சாராயம் குடித்த 11 பேர் உயிரிழப்பு: 300-க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதி!



இம்பால், நவ. 21–

மணிப்பூர் மாநிலம் சண்டேல் மாவட்டத்தில் உள்ள சக்பிகரோங் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த பலர், கடந்த சில நாட்களுக்கு முன்பு கள்ளச்சாராயம் குடித்துள்ளனர். இதனால் அவர்களுக்கு தலைச்சுற்றல், வயிற்றுவலி உள்ளிட்ட பல்வேறு உடல்நல பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதையடுத்து உடல்நலம் பாதிக்கப்பட்ட 300–க்கும் மேற்பட்டோர் இம்பாலில் உள்ள ஜே.என்.ஐ.எம்.எஸ்., ஆர்.ஐ.எம்.எஸ்., ஷிஜா மற்றும் பபினா உள்ளிட்டபல்வேறுமருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 11 பேர் கடந்த 48 மணிநேரத்தில் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த மணிப்பூர் முதல்–மந்திரி ஒய். கே. சிங், நேற்று மருத்துவமனைகளுக்கு நேரில் சென்று சிகிச்சை பெற்று வருபவர்களின் உடல்நிலை குறித்து கேட்டறிந்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதள பதிவில், "ஷிஜா மருத்துவமனையில் 140–க்கு மேற்பட்டோரும், பபினா மருத்துவமனையில் 41–க்கு மேற்பட்டோரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 48 மணி நேரத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். சண்டேல் மாவட்டத்திற்கு தேவையான மருந்துகளுடன் சிறப்பு மருத்துவக் குழு அனுப்பப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி, குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சில நோயாளிகளுக்கு ரத்த சுத்திகரிப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மெத்தனால் கலந்த சாராயத்தை குடித்ததால் இந்த பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 2-ம் கட்ட இறுதி காலியிடங்களுக்கான கலந்தாய்வு சித்தா, ஆயுர்வேதா படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்: ஓமியோபதி துறை இயக்குநர் அறிவிப்பு!

சென்னை, நவ. 21–

சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி படிப்பு இரண்டாம் கட்ட இறுதி காலியிடங்களுக்கான கலந்தாய்வுக்கு நவ. 22 முதல் 23ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் தெரிவித்துள்ளார். பி.ஏ.எம்.எஸ், பி.எஸ்.எம்.எஸ், பி.யு.எம்.எஸ், பி.எச்.எம்.எஸ் மருத்துவ பட்டப்படிப்புகளுக்கான உரிய தகவல் தொகுப்பேட்டினை www.tnayushselection.org என்ற வலைதளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையவழியில் மட்டுமே விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேசிய தேர்வு முகமையால் நடத்தப்பெறும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு 2026–ல் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மருத்துவ பட்டப்படிப்புகளுக்கான சேர்க்கை நடைபெறும். மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க தேவையான தகுதிகள், விண்ணப்பக் கட்டணம் மற்றும் பிற கட்டண விவரங்கள், கலந்தாய்விற்கான அட்டவணை மற்றும் பிற தகவல்களினை www.tnayushselection.org என்ற வலைதளத்தில் உள்ள உரிய தகவல் தொகுப்பேட்டில் அறியலாம். இரண்டாம்கட்ட இறுதி காலியிடங்களுக்கான சுற்றின் காலியிட விவரங்கள் தேர்வுக்குழுவின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.tnayushselection.org–ல் பதிவேற்றம் செய்யப்படும். விண்ணப்பிக்கும் முன் உரிய தகவல் தொகுப்பேட்டினை முழுமையாகப் படித்து சரியான தகவல்களைப் பதிவேற்றவும் மற்றும் தேவையான இடங்களில் அனைத்து அசல் சான்றிதழ்களின் PDF/JPEG வடிவில் பதிவேற்றவும். விண்ணப்பக் கட்டணம், இணையவழி கலந்தாய்வுக் கட்டணம், கல்விக் கட்டண முன்பணம் இவை அனைத்தும் இணையவழி மூலமாக மட்டுமே செலுத்த வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் அரசு ஒதுக்கீட்டு இடங்கள், அரசுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள், அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும். நவ 22 முதல் 23ம் தேதி மாலை 5 மணிவரை இணைய வழியில் விண்ணப்பிக்கலாம். மேலும் கலந்தாய்வு குறித்த விரிவான விவரங்களுக்கு உரிய தகவல் தொகுப்பேட்டினைப் பார்க்கவும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.182, Vakkil New Street, Simmakkal, Madurai –625 001. Published by Dr.P.Pandiarajan, No.182, Vakkil New Street, Simmakkal, Madurai –625 001. Editor. Dr. P. Pandiarajan. TN/WPP–143/SR/2018–2020